மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.203/2007

வா.சா.4 காஜா அமானுல்லா

01.02.2019 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமானத்தின்பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை என் அப்பாவின் பெயர் அப்துல் காதர் ஜெயிலான். இவ்வழக்கின் 4 ம் பிரதிவாதி அப்துல் காதர் என்று சொல்லப்பட்டுள்ளது என்றும், அவருக்கும் எனக்கும் என்ன சம்மந்தம் என்றால் அவர் என்னுடைய அப்பா. நான் ஹீபா ஆவணம் எழுதும்போது அங்கு இருந்தேன் என்பதற்கு எதாவது சாட்சியம் உள்ளதா என்றால் இல்லை. ஜமாத்தில் ஹீபா ஆவணம் எழுதிய பின்பு பொது அறிவிப்பு செய்யப்பட்டதா என்றால் இல்லை. அவ்வாறு செய்வது ஜமாத்தில் வழக்கம் இல்லை. கீபா ஆவணம் முத்திரைக்கட்டணத் தாளில் எழுதப்படவில்லை. பச்சைத்தாளில் எழுதப்பட்டது. ஹீபா ஆவணம் பத்திர அலுவலகத்டிதல் பதிவு செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு ஹீபா ஆவணத்தைப்பற்றி எதுவும் தெரியாது என்றும் வாதிக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6,7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை என்னிடம் காட்டப்படும் சா.சா.ஆ.1 ல் நான் கோவை, சுந்தராபுரம், குறிச்சியில் குடியிருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் உடுமலைப்பேட்டையில் குடியிருக்கிறேன் என்பதற்கு எழுத்துமூலமான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நான் எந்தக்காலத்திலும் உடுமலைப்பேட்டையில் குடியிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தாயார் பெயர் முனிராபேகம் என்றால் சரிதான். என்னுடைய தாயார் உயிருடன் உள்ளார். நான் என்னுடைய தாயார், என் மனைவி மற்றும் என் குழந்தைகள் அனைவரும் ஒரே குடும்பமாக குறிச்சியில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதியான அப்துல் காதர் குடும்ப அட்டையில் என் பெயரோ, என் தாயார் பெயரோ, என் குடும்பத்தாரின் பெயரோ குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 4 ம் பிரதிவாதி என்ன பணியில் இருந்து பணி ஓய்வு பெற்றார் என்றால், என்போர்ஸ் ரேஞ்சர் ஆபிசராக இருந்து ஓய்வு பெற்றார். அவருடைய ஓய்வூதிய புத்தகத்தை நான் இதுவரை பார்த்தது இல்லை. என்னிடம் காட்டப்படும் ஓய்வூதியப் புத்தகத்தில் உள்ள புகைப்படத்தில் உள்ள நபர் 4 ம் பிரதிவாதிதான். அது அவருடைய ஓய்வூதியப் புத்தகம்தான். மேற்படி 4 ம் பிரதிவாதியின் ஓய்வூதியப் புத்தகத்தின் புகைப்பட நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது பி.வா.சா.ஆ.5. பி.வா.சா.ஆ 5 ல் என் பெயரும் என் தாயார் பெயரும் இல்லை என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதியின் மனைவி பெயர் நஜுநிசா பேகம் என்றால் சரிதான். நஜுநிசா பேகத்தின் தகப்பனார் பெயர் துலாப்கான்சாகிப் என்றால் எனக்கு தெரியாது. 4 ம்

பிரதிவாதியின் மனைவியான நஜுநிசாபேகம் 17.6.2011 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 4 ம் பிரைதிவாதிக்கும் நஜுநிசாபேகத்துக்கும் விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர் பேட்டையில் 28.3.1975 ம் தேதி நிக்கா நடந்தது என்றால் எனக்கு தெரியாது. 4 ம் பிரதிவாதியின் மனைவி இறந்ததற்கு உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் 15.7.2011 ம்தேதி வாரிசுரிமைச்சான்று வழங்கியுள்ளார். அதில் என் பெயரோ என் தாயார் பெயரோ இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாரிசுரிமைச்சான்றுதான் நஜுநிசா பேகத்துடையது என்றால் சரிதான். நஜுநிசாபேகத்தின் வாரிசுரிமைச்சான்று அசலுடன் ஒப்பிடப்பட்ட நோட்டரி நகல் பி.வா.சா.ஆ.6. 4 ம் பிரதிவாதிக்கு நூருல் அயுன், சாகாஉமம், சாயா அரன் மற்றும் அனிதாபேகம் ஆகியோர் மட்டும்தான் வாரிசுகள் என்றால் சரியல்ல. அப்துல் காதருக்கும் என் தாயாரான முனிராபேகத்துக்கும் எந்த ஊரில எந்த தேதியில் நிக்கா நடந்தது என்றால், தேதி எனக்கு தெரியாது. பாலக்காட்டுக்கு பக்கத்தில் உள்ள கிராமத்தில் நிக்கா நடந்தது. கிராமத்தின் பெயர் எனக்கு தெரியாது. நிக்கா நடந்ததற்கு ஆதரவாக ஜமாத்தில் பதிவு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. முனிராபேகம் 4 ம் பிரதிவாதியின் மனைவி என்று காட்டுவதற்கு எழுத்துப்பூர்வமாக எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல, உள்ளது. என்னுடைய பிறப்புச்சான்றிதழிலும், பாஸ்போர்ட்டிலும், ஆதார் அட்டையிலும் என் தந்தையின் பெயர் அப்துல் காதர் என்று உள்ளது. மேற்படி ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள அப்துல் காதர் 4 ம் பிரதிவாதி அல்ல என்றால் சரியல்ல. வழககுச்சொத்து என்ன சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண்கள் 9/5 பி, மற்றும் 9/5 சில் உள்ளது. அதில் கிணறு உள்ளது. மின் இணைப்பும் உள்ளது. மின் இணைப்பு எண்.141. மின் இணைப்பு 5 ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. ஹீபா கொடுத்ததாகச் சொல்லப்படும் சொத்தை சுலைகாபீவி 4,5 பிரதிவாதிகளுக்கு 15.2.95 ம்தேதி கிரையம் கொடுத்துவிட்டாரா என்றால் எனக்கு தெரியாது. அந்த கிரையப்பத்திரத்தில் 4 ம் பிரதிவாதியின் மாமனார் துலாப்கான்சாகிப் சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. உடுமலைப்பேட்டையில் சாமியா பள்ளிவாசல் இல்லை. அந்த பள்ளிவாசலில் நான் ஜமாத்தாராக இல்லை என்றும் என்னை ஜமாத்தார் சேர்க்க மறுத்துவிட்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நான் அந்த ஜமாத்தில் உள்ளேன் என்பதற்கான ஆவணத்தை என்னால் தாக்கல் செய்யமுடியும். ஜமாத்தில் எனக்கு ஓட்டுரிமை அளிக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னை ஜமாத்தில் உறுப்பினராக சேர்க்கவேண்டுமென்று என் தந்தை பெயர் அப்துல் காதர் என்று கொடுத்ததால் அது பொய் என்று விசாரணை செய்து என்னுடைய மனுவை நிராகரித்துவிட்டார்கள் என்றால் தவறு. சுலைகாபீவி 5.11.2002 ல் இறந்தார். வழக்குச்சொத்துக்கு சுலைகாபீவி இறந்தபின்பு அல்லது ஹீபா ஆவணம் எழுதிய பின்பும் யார் பெயரில் வரி செலுத்தப்பட்டது என்றால், சுலைகாபீவிக்காக மெகஸ்பீன் வரி

செலுத்தினார். நான் சொல்லும் வாய்மொழி ஹீபாவுக்குப்பின்பு எழுத்துமூலமான ஹீபாவுக்கு பின்பும் வழக்குச்சொத்தில் சுலைகாபீவிதான் உரிமை கொண்டாடி வந்ததால் அவர் பெயரில்தான் வரி செலுத்தப்பட்டு வந்தது என்றால் சரியல்ல. 1995 ல் சுலைகாபீவி 4,5 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்தபின்பு சுலைகாபீவி எவ்விதமான உரிமையும் கோரவில்லை என்றும், 4,5 பிரதிவாதிகளின் உரிமைக்கு எதிராக வேண்டுமென்றே சுலைகாபீவிக்காக மெகஸ்பீன் வரி செலுத்துவதாக கண்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பத்திரம் அலுவலகத்திற்க சென்று 4,5 பிரதிவாதிகளின் கிரையம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. ஹீபா ஊர்ஜித ஆவணம் 6.8.2002 ம் தேதியில் எழுதப்பட்டது. வாய்மொழி ஹீபா 10.7.2002 ல் கொடுக்ககப்பட்டது. நான் சொல்லும் அந்த இரண்டு நிகழ்ச்சிகளும் சுலைகாபீவியின் வீட்டுக்குள் வைத்து நடந்ததாக நான் சொல்கிறேன். நான் ஹீபா ஆவணத்தில் சாட்சி கையெத்து செய்ததற்கு என்ன காரணம் என்றாடலல் இருவர் போட்டால் போது என்பதால் போடவில்லை. நான் அங்கு இல்லை என்ற சொன்னால் சரியல்ல. எனக்கு ராமச்சந்திரனை தெரியும். வாய்மொழி கீபாவின் பொழுதும் ஹீபா ஆவணம் எழுதும்போதும் அந்த இடட்ததில் ராமச்சந்திரன் இல்லை என்றால் சரிதான். கீபா ஊர்ஜித ஆணம் 2002 ல் எழுதப்படவில்லை என்றும் அதனால்தான் நான் அதில் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றும், ஹீபா ஆவணம் இந்த வழக்கிற்காக தற்போது தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. ஹீபா ஆவணம் எழுதுபோதும் வாய்மொழி ஹீபாவின்போதும் மெகஸ்பீனுக்கு சொத்தின் சுவாதீனம் கொடுக்கப் படவில்லை என்றால் சரிதான். 2002 ம் ஆண்டு சொத்து ராமச்சந்திரனிடம் இருந்தது. 2002 ம்ஆண்டு ஹீபா எழுதப்பட்டதாக சொல்லும் தேதியில் வாய்மொழி ஹீபா தேதியிலும் குத்தகைதாரர் ராமச்சந்திரனை வரவழைத்து ஹீபாவை பொறுத்து அவரிடம் எடுத்துக்கூரி நிலச்சுவான்தாரரை மெகஸ்பீனை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று எழுத்துமூலம் எழுதிவாங்கவில்லை என்று சொன்னால் சரிதான். உடுமலைபேட்டை சார்பு நீதிமன்ற அ.வ.எண்.123/95 வழக்கு பற்றி எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.112/92, 176/03 வழக்குகளைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்குகளைப்பற்றி சுலைகாபீவியும், மெகஸ்பீனும் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்குச்சொத்தை யார் கிரையம் வாங்கினார்கள் என்றால், சுலைகாபீவிதான் கிரையம் வாங்கினார். ஹீபா ஆவணத்தில் வழக்குச்சொத்தை சுலைகாபீவி கிரையம் வாங்கவில்லை என்றும், கௌஸ்மைதீன் கிரையம் வாங்கியதாக எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. அதேபோல் ராமச்சந்திரன் குத்தகைதாரர் என்று ஹீபா ஊர்ஜித ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுலைகாபீவி உடுமலை சார்பு நீதிமன்றம், பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆகிய

வழக்குகளில் தாக்கல் செய்துள்ள் எதிர்வழக்குரையில் தாவாச்சொத்துக்கள் தன் பணத்தை வைத்து தானே கிரையம் வாங்கியதாகவும் கௌஸ்மைதீனுக்கு அதில் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும் வழக்குச்சொத்தை ராமச்சந்திரனுக்கு குத்தகைக்கு விடவில்லை என்று எதிரவாதம் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சாட்சியத்தில் சொல்லியுள்ள சங்கதிகளை பொய் என காட்ட மெகஸ்பீன் ஹீபா ஆவணம் தயார் செய்து அதற்கு பொய் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ராமச்சந்திரனை குத்தகைதாரர் இல்லை என மதுரை வருவாய் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் 4ம் பிரதிவாதியின் மகன் இல்லை என்றும் வாதிக்காக பொய் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.